முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 493/2019

தேதி : 12–03–2026

(வா.சா.1) – திருமதி.ராணி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4 முதல் 8–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

4 முதல் 8–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1ம் வாதி பாலசுப்ரமணியம் என் கணவர் என்றால் சரிதான். 2 முதல் 5ம் பிரதிவாதிகள் என் பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். என் மாமனார் பெயர் குழந்தைவேல் பண்டாரம் என்ற குழந்தைவேல் பிள்ளை என்றால் சரிதான். 4முதல் 8ம் பிரதிவாதிகளின் தந்தை செல்லப்பன் என்பவர் என் கணவரின் சகோதரர் என்றால் சரிதான். செல்லப்பனுக்கு 1/6 பாகம் உள்ளது என்றால் சரிதான். நானும் 1/6 பாகம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பாகத்தை பொ றுத்து 4 முதல் 8ம் பிரதிவாதிகளுக்கு ஆட்சேபணை இல்லை என்பதால் எனவே செலவு தொகை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான்.

**29ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

29ம் பிரதிவாதி ராமசாமி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர் எங்குள்ளார் என்றால் தெரியாது. இவ்வழக்கை யார் தாக்கல் செய்தார் என்றால் என் கணவர் தாக்கல் செய்தார், அவர் இறந்துவிட்டார், வாரிசு என்பதால் நாங்கள் கட்சியாக சேர்ந்துள்ளோம். சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.5, பட்டா எண்.14. 29ம் பிரதிவாதி சுபாஸ் என்பவரிடம் கிரையம் வாங்கி 25, 30 ஆண்டாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 29ம் பிரதிவாதி T.S.No.4/1C சொ்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றும், அவர் நாடார் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றும், எங்கள் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கவில்லை என்றும், எனவே வழக்கு சொத்திற்கும் 29ம் பிரதிவாதிக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் 29ம் பிரதிவாதியின் சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றும், தவறாக 29ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல.

**34ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –**

34ம் பிரதிவாதி கண்ணன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும்

என்றால் வழக்கு சொத்தில் அவர் இருக்கிறார். அதன் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 5/2. 34ம் பிரதிவாதி பொன்னுசாமி மகேஸ்வரன் என்பவரிடம் இருந்து 14.11.2005ல் சர்வே எண்.4/1C சொத்தை கிரையம் வாங்கினார் என்றும், அப்போதிலிருந்து அவர் தான் அந்த சொத்தில் கட்டிடம்கட்டி சுவாதினம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, எங்கள் சொத்தில் தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், 34ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தும் வழக்கு சொத்தும் வெவ்வேறு என்றால் சரியல்ல. 34ம் பிரதிவாதி இவ்வழக்கில் அவசியமற்ற தரப்பினர் என்றும், எனவே அவரை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. மேலும் உரிய காலத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்படாத நிலையிலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்./–K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.